**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI**

# OS . NO.159/2019 P.W.1

Deposition of Witness for the Petitioner / Respondents Solemnly affirmed by of this Court on **20.09.2021** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| **Name:** வேலுச்சாமி | **Father's Name:** |
| **Caste:** | **Religion:** |
| **Village:** | **Taluk:** |
| **Calling:** | **Age:** |

**வாதி தரப்பில் முதல் விசாரணை :**

இந்த வழக்கில் நான் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அதில் சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தும் படித்து பார்த்து கையொப்பம் போட்டேன். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட தாவா பி செடியூல் சொத்தை பொறுத்து 06.07.2012 தேதியன்று மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி ஏற்பட்ட சமரச ஒப்பந்தம் வாசாஆ 1. 06.03.2013 தேதியிட்ட சமரச தீர்ப்பாணை நகல் வாசாஆ 2. 11.12.2016 தேதியிட்ட கோவில் கும்பாபிஷேக பத்திரிகை நகல் வாசாஆ 3. 28.07.2017 தேதியிட்ட வாதி கோவில் சம்பந்தமாக வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக RDO முன்னிலையில் பெறப்பட்ட உத்தரவின் நகல் வாசாஆ 4. பி செடீயூல் சொத்து சம்பந்தமாக சொத்தை காலி செய்து சுவாதினம் மற்றும் இழப்பீடு கோரி அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு வாசாஆ 5. ஒப்புதல் அட்டை வாசாஆ 6. வாதி கோயிலில் கும்பாபிஷேகத்தை தடை செய்தது சம்பந்தமாக பிரதிவாதிக்கு எதிராக மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு கொடுக்கப்பட்ட புகார் நகல் வாசாஆ **7.** ஒப்புதல் அட்டை நகல் வாசாஆ 8. 01.12.2018 தேதியிட்ட மீண்டும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வாசாஆ 9. பிரதிவாதி மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு ஆங்கிலம்

தெரியாது என்றும் தமிழாக்கம் செய்து அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று கூறி அனுப்பிய கடிதம் வாசாஆ 10. தமிழாக்கம் செய்து அனுப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வாசாஆ 11. பிரதிவாதியின் உடற்பயிற்சி கூட அழைப்பிதழ் வாசாஆ 12. கும்பாபிஷேக பணிகள் குறித்த CD and photo வாசாஆ 13, 14. அதற்கான ரசீதுகள் வாசாஆ 15. கோயில் சொத்திற்கான வரி ரசீதுகள் வாசாஆ 16. மின்சார வரி ரசீதுகள் வாசாஆ 17. பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டும்.